# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் **2020–**ம் வருடம் ஜீலை மாதம் **30–**ம் தேதி காலை **11.30** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது அக்கூட்ட நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு.

அக்கூட்டத்தில் கலந்துக்கொண்டவர்கள் – திரு . பெர்பெற்றி டெரன்ஸ் லியோன்,M.Sc.,
ஆணையாளர்(ம) தனி அலுவலர்

## <u>பொருட்கள்</u>

1)இந்நகராட்சி அலுவலக ஈப்பு வாகன பராமரிப்பு பணிக்கு வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

| வ. எண் | நிறுவனதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | அக்ஷயா மோட்டார்ஸ்<br>குலசேகரம் சாலை,<br>உண்ணாமலைக்கடை. | 19116.00 |
| 2 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்<br>புதுக்குடியிருப்பு,<br>வடசேரி, நாகர்கோவில் | 18595.00 |
| 3 | மாதா மோட்டார் ஒர்க்ஸ்<br>வெள்ளமடம்,<br>நாகர்கோவில் | 14620.00 |

மேற்கண்ட விபரப்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் மாதா மோட்டார் ஒர்க்ஸ், வெள்ளமடம், நாகர்கோவில் என்ற நிறுவனம் மிக குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ளதால், அதனை ஏற்கவும், குறைவான விலைப்புள்ளி வழங்கிய மாதா மோட்டார்ஸ், அவர்களிடம் பணியை ஒப்படைத்து மேற்கொள்ளவும் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.2897/2007/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1672, நாள்.30.07.2020.</u>**
**குறைந்த விலைப்புள்ளி அங்கீகரித்து பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.**

2) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்-19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொரோனா நோய் தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் பொது மக்கள் செல்லாத வண்ணம் தடை செய்யப்பட்ட பகுதியாக தடுப்புகள் அமைக்க தேவையான பொருட்கள் வாங்க அனுமதிக்கும். அதற்காகும் உத்தேச செலவீன தொகை ரூ. 74740/- (எழுபத்தி நான்காயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- கோவிட்- 19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொருட்கள் வாங்க அனுமதிக்கும் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

<u>மன்றத் தீர்மானம் எண். 1674, நாள்.30.07.2020.</u>

**<u>அனுமதிக்கப்படுகிறது.</u>**

3) இந்நகராட்சிக்கு 2018-2019-ம் ஆண்டு தணிக்கை கட்டணமாக ரூ. 93646/-ஐ உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2018-19-ம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ. 93646/-ஐ அரசு கணக்கு தலைப்பில் செலுத்தவும் ரூ.93646/-ஐ பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1498/15/அ1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1675, நாள்.30.07.2020.</u>

**<u>அனுமதிக்கப்படுகிறது.</u>**

பத்மனாபபுரம் நகராட்சி 2019-2020-ம் ஆண்டிற்கு பொது நிதி மற்றும் குடிநீர் கணக்கு தணிக்கைக்கு தயார் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி கணக்குகள் திரு. K. கருணாகரன் நாயர் மூலம் தயார் செய்ய ஒரு கணக்கிற்கு ரூ.20000/- வீதம் இரண்டு கணக்கிற்கு ரூ.40000/- கூலியாக வழங்க வேண்டியுள்ளது. எனவே 2019-2020-ம் ஆண்டிற்கு கணக்கு முடிக்க பொது நிதியில் இருந்து வழங்கவும் அன்னாரிடம் கணக்கு ஒப்படைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1517/2015/பி1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1676</u>

**அனுமதிக்கப்படுகிறது.**

4) பத்மனாபபுரம் நகராட்சியில் பொது நிதி 2020- 2021 ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **2.30** |

மேற்கண்ட பணிக்கு 30.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் / நிறுவனதாரர் பெயர்** |
|---|---|
| 1, | திரு.சி.ஜெகஸ்லால்,<br>பரைக்கோடு ,<br>தக்கலை |
| 2, | திரு.பி.ஆஸ்டின் கிலாரி,<br>நெல்லியார்கோணம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர்/ நிறுவனதாரர் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை ரூ. | விலை விகிதம் கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1, | திரு.சி.ஜெகஸ்லால், பரைக்கோடு , தக்கலை | 2.30 | 220049 | 0.01 % சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2, | திரு.பி.ஆஸ்டின் கிலாரி, நெல்லியார் கோணம் | 2.30 | 224100 | 1.83 % சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் (0.01 % சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு) வழங்கியுள்ள வ.எண்.1-ல் காணும் ஒப்பந்ததாரர் திரு.சி.ஜெகஸ்லால், பரைக்கோடு ,தக்கலை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 1677, நாள்.30.07.2020.**

**திரு.சி.ஜெகஸ்லால், ஒப்பந்தகாரர் தந்துள்ள குறைந்த நிரக்கிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

5) பத்மனாபபுரம் நகராட்சியில் பொது நிதி 2020- 2021 ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி அலுவலக ஆணையாளர் அறையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **1.60** |

மேற்கண்ட பணிக்கு 30.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் / நிறுவனதாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு.சி.ஜெகஸ்லால்,<br>பரைக்கோடு ,<br>தக்கலை |
| 2 | திரு.பி.ஆஸ்டின் கிலாரி,<br>நெல்லியார்கோணம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர்/ நிறுவனதாரர் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை ரூ. | விலை விகிதம் கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.சி.ஜெகஸ்லால், பரைக்கோடு , தக்கலை | 1.60 | 146349 | 0.13% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி.ஆஸ்டின் கிலாரி, நெல்லியார்கோணம் | 1.60 | 151870 | 3.64 % சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் (0.13% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு) வழங்கியுள்ள வ.எண்.2-ல் காணும் ஒப்பந்ததாரர் திரு.சி.ஜெகஸ்லால், பரைக்கோடு ,தக்கலை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 1678, நாள்.30.07.2020.**

**திரு.சி.ஜெகஸ்லால், ஒப்பந்தகாரா் தந்துள்ள குறைந்த நிரக்கிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

6) இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களின் அறிக்கையின் படி வார்டு எண் 4 ல் கதவு எண் 4-49 /H என்ற எண் கொண்ட திரு. எஸ். சசிதரன் என்பவரின் குடியிருப்பு சொத்து வரி விதிப்பு எண் 151/8890 - க்கு அரையாண்டு வரி 120/- என வசுலிக்கப்பட்டு நிலுவை ஏதும் இல்லாமல் இருந்து வருகிறது.

மேற்கண்ட குடியிருப்புதாரரின் குடிநீர் இணைப்பு வரி விதிப்பு எண் 151/8667 -க்கு குடிநீர் கட்டணம் வீட்டு உபயோகம் அல்லாத (DOMESTIC) இணைப்பாக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி குடிநீர் குழாய் இணைப்பினை வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1732/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1679, நாள்.30.07.2020.**

**அனுமதிக்கப்படுகிறது.**

7)இந்நகராட்சிக்கு சொந்தமான மருந்துக்கோட்டை உரக்கிடங்கில் சேகரமாகும் திடக்கழிவுகளை பொக்லைன் மூலம் சீராய்வு செய்வதற்கு 14.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | பி.ஆஸ்டின் கிலாரி, நெய்யூர். | 1 மணி நேரத்திற்கு ரூ.2200/- |
| 2 | சி. ஜெகஸ்லால், தக்கலை. | 1 மணி நேரத்திற்கு ரூ.2100/- |

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2 ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த சி. ஜெகஸ்லால்,தக்கலை ஒப்பந்ததாரருக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1680, நாள்.30.07.2020.</u>**

**திரு.சி.ஜெகஸ்லால், ஒப்பந்தகாரர் தந்துள்ள குறைந்த நிரக்கிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

8) இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண் TN74 D 4151 கழிவுநீர் வாகனத்திற்கு வாகன விபத்து காப்பீடு பிரீமியம் தொகை செலுத்தும் தியதி 07.08.2020 அன்றோடு முடிவடைந்து விட்டதால் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு பிரீமியம் செலுத்த ஆகும் செலவுத் தொகை ரூ. 30858/-ஐ யூனைடெட் இந்தியா நிறுவனத்திற்கு காசோலையாக வழங்கவும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையாளர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையாளர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 0549/2009/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1681, நாள்.30.07.2020.</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

9) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் - 19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் தடுப்புகள் அமைக்க தேவையான தளவாட பொருட்கள் நவிநியோகம் செய்ய 24.07.2020 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விநியோகம் செய்ய வேண்டிய பொருட்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | சி. ஜெகஸ்லால்<br>பரைக்கோடு | தகரச்சீட்டு (3x8) அளவு ஒன்று | 310 |
| | | மரக்கம்பு (15 அடி நீளம்) 1 மட்டும் | 75 |
| | | திரை தடுப்புத் துணி<br>1 Roll | 2650 |
| | | சுத்தியல் 1 எண்ணம் | 180 |
| | | ஆணி (3 Inch) 1 Kg | 80 |
| | | ஆணி (5 Inch) 1 Kg | 90 |
| | | கட்டு கம்பி 1 Kg | 100 |
| | | நைலான் பிளாஸ்டிக் கயிறு | 50 |
| 2 | பி. ஆஸ்டின்<br>காட்டுவிளை | தகரச்சீட்டு (3x8) அளவு ஒன்று | 330 |
| | | மரக்கம்பு (15 அடி நீளம்) 1 மட்டும் | 80 |
| | | திரை தடுப்புத் துணி<br>1 Roll | 2700 |
| | | சுத்தியல் 1 எண்ணம் | 190 |
| | | ஆணி (3 Inch) 1 Kg | 100 |
| | | ஆணி (5 Inch) 1 Kg | 100 |
| | | கட்டு கம்பி 1 Kg | 110 |

| | | | |
|---|---|---|---|
| | | நைலான் பிளாஸ்டிக் கயிறு | 70 |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வ.எண் 1-ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த சி. ஜெகஸ்லால் ஒப்பந்ததாரர் விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கும், அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ஆணையாளர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

தனி அலுவலர்/ஆணையாளர் முன் அனுமதி பெற்று அவசரம் அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 1682, நாள்.30.07.2020.**

**திரு.சி.ஜெகஸ்லால் ஒப்பந்தகார்ரின் ஒப்பந்தப்புள்ளி குறைந்த நிரக்கில் உள்ளமையால்** அங்கீகரிக்கப்படுகிறது.

10) இந்நகராட்சியின் 2019-2020 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண். 1683, நாள்.30.07.2020.**

அங்கீகரிக்கப்பட்டது.

**11)**இவ்வலுவலக வருவாய் ஆய்வர் அவர்களின் அறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, கதவு எண்.13/41 ஏ2 எண் கொண்ட கட்டிடம் திரு. ஆர்.செல்வமணி பெயரில் குடியிருப்பு பயன்பாடு என வரி விதிப்பு செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட கதவு எண் கொண்ட குடியிருப்பு வீட்டு உபயோக அல்லாத இணைப்பாக இருந்து வருகிறது. மேற்படி வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பாக வழங்கியுள்ள வரிவிதிப்பு எண்.151/5878–ஐ (சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் நிலுவையினை செலுத்தப்பட்டுள்ளதால் ) வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.436/2020/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1684, நாள்.30.07.2020.**

அனுமதிக்கப்படுகிறது.

12)பத்மனாபபுரம் நகராட்சியில் பொது நிதி 2020- 2021 ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான டவுண்ஹாலில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | **0.36** |

மேற்கண்ட பணிக்கு 24.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் / நிறுவனதாரர் பெயர் |
|---|---|
| 1, | திரு.என்.ஜான் ஜஸ்டஸ்,<br>ஈத்தவிளை,மேக்கா மண்டபம். |
| 2, | திரு.சி.ஸ்டீபன்,வாலன்<br>விளை,மூலச்சல்,மேக்கா மண்டபம். |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர்/ நிறுவனதாரர் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை ரூ. | விலை விகிதம் கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1, | திரு.என்.ஜான் ஜஸ்டஸ், ஈத்தவிளை,மேக்கா மண்டபம். | 0.36 | 31026.34 | - 0.02 % சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2, | திரு.சி.ஸ்டீபன், வாலன் விளை,மூலச்சல், மேக்கா மண்டபம். | 0.36 | 31701.00 | 2.16% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் (- 0.02 % சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு) வழங்கியுள்ள வ.எண்.1-ல் காணும் ஒப்பந்ததாரர் திரு.என்.ஜான் ஜஸ்டஸ், ஈத்தவிளை,மேக்கா மண்டபம்.அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 1685, நாள்.30.07.2020.**

**திரு.என்.ஜான்ஜஸ்டஸ், ஒப்பந்தகாரரின் குறைந்த நிரக்கிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**